விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 24
ஒலி 157 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 11 வியாழக்கிழமை (25.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க பதவி நீக்கம்

### 46 மேலதிக வாக்குகளால் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது



(கொழும்பு)

பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக் கவை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் 46 மேலதிக வாக்குகளால் பாராளுமன் றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான பிரேரணைக்கு ஆதரவாக 123 வாக்குகளும் எதிராக 77 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந் தன.

இந்த வாக்கெடுப்பில் ஐக்கிய மக் கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸும் அரசாங்கத்தின் இந்தப் பிரேரணைக்கு ஆத ரவாக வாக்களித்திருந்தார். 11

## கொரோனாவைவிட ஆபத்தான பெருந்தொற்று ஏற்பட வாய்ப்பு

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



(ஜெனிவா)

கொரோனாத் தொற்றைவிட பெரும் பாதிப் புக்களை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான தொற்றுநோய் பரவ வாய்ப்புள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. *(11ஆம் பக்கம் பார்க்க)*

### கலாநிதி இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் யாழ்.பல்கலையில் திறப்பு



06

## கிளிநொச்சியில் விபத்து; துன்னாலை இளைஞன் பலி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி முகமாலைப் பகுதி யில் நேற்றுக் காலை 6.30 மணியள வில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் பலியாகியுள்ளார்.

இதில் துன்னாலை பகுதியை சேர்ந்த கிருஸ்ணகுமார் விக்னேஸ்வரன் (வயது-32) 11

## 6 பொருட்களின் விலையை குறைத்தது சதொச

(கொழும்பு)

ஆறு பொருட்களின் விலையை நேற்று முதல் அமுலாகும்வகையில்சதொச குறைத்துள்ளது.

இதன்படி, 400 11

## தொல்லியல் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுடன் சிறீதரன் எம்.பி கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற் கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் சமகால நிலை குறித்து, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் பிரதானிகளுக்கும், பாராளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடை யிலான கலந்துரை 11

## தையிட்டியில் கைதானவர்கள் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் அமைக் கப்பட்ட விகாரையை அகற் றக் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் 9 பேரும் 11

## ஆசிரியரைத் தாக்கிய பாடசாலை மாணவன்

### யாழில் முஸ்லிம் பாடசாலை ஒன்றில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பாடசாலை ஒன்றில் பயிற்சி ஆசிரியர் மீது மாணவன் ஒரு வர் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் குறித்த மாணவன் 11

## ஜூலை முதல் மின்சாரக் கட்டணம் 23 சதவீதத்தால் குறைக்கப்படும்

### சபையில் எரிசக்தி அமைச்சர் கஞ்சன



(கொழும்பு)

எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் வீட்டுப் பாவனை மின்சாரக் கட்டணங்கள் 23 சத வீதத்தால் குறைக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது அவர் இத னைத் தெரிவித்தார்.

அத்துடன், வழிபாட் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**ஆண்டு திவச கிரியைகள் :**
**25.05.2023 வியாழக்கிழமை**

கடந்த 05.06.2022 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் தேவசிகாமணி தங்கமலர்



மண்ணில் 26.07.1946 விண்ணில் 05.06.2022

அவர்களின் சிவபேறு குறித்த ஆண்டு திவச கிரியைகள் இன்று 25.05.2023 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகுரு வித்தியாசாலை ஒழுங்கை,
மதவடி, வல்வெட்டித்துறை.

(C-6611)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## அப்பையா இரத்தினசிங்கம்

**(காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம், இரசாயனப் பகுப்பாய்வாளர்)**



அரசடி வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா இரத்தினசிங்கம் அவர்கள் 23.05.2023 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பையா - மாணிக்கம் (சின்னத்தங்கம்) ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வப்பாக்கியத்தின் அன்புக் கணவரும் குணசிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் தர்மகுலசிங்கம் காலஞ்சென்றவர்களான செல்லக்கிளி, சந்திரகுமார் மற்றும் நாகேஸ்வரி, நகுலேஸ்வரி, உமா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா, அண்ணாமலை, செல்லையா, நாகரத்தினம், சாம்பசிவம், கிஸ்ணபிள்ளை மற்றும் பாலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் நித்தியானந்தமலர் (விசியா), சதீசன் (மோகன் - நோர்வே), றதீசன் (பிரான்ஸ்), ஜெகதீசன் (நோர்வே), காலஞ்சென்ற சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற இளங்கோவன் மற்றும் காயத்திரி, ஜெனிற்றா, முகுந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் நந்தகோபன், டில்க்சி (சைனு - பிரான்ஸ்), டினேஸ்கோபி, சாந்தகோபி, சியான் (நோர்வே), திசியன், திமிஷா, திவிஷா, றொபிஷா, ஜெனிஷா (பிரான்ஸ்), நிஸ்கா, கவீஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் வினுஸ், கரிஸ், தியா, தமீரா ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2023) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்

(C-6610)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினருடன் புலிகளை இணைத்து நினைவுத்தூபி அமைப்பது கோழைத்தனமானது

## சரத் வீரசேகர சீற்றம்

(கொழும்பு)

**நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த படையினரையும் விடுதலைப் புலிகளையும் ஒன்றிணைத்து நினைவுகூரும் வகையில் தூபி அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை கோழைத்தனமானது.**



அரசாங்கத்தின் தீர்மானத்தையிட்டு வெட்கமடைகிறேன். தீர்மானம் திருத்திக் கொள்ளப்பட வேண்டும் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற உற்பத்தி வர்த்தமானி கட்டளைகள் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

யுத்தத்தில் உயிரிழந்த அனைவரையும் நினைவுகூரும் வகையில் "நினைவுத் தூபி" ஒன்றை ஸ்தாபிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அறிய முடிகிறது. இதனை நல்லிணக்கம் என்று குறிப்பிடக் கூடாது. கோழைத்தனமான செயற்பாடு என்றே குறிப்பிட வேண்டும்.

நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த முப்படையினரையும் விடுதலைப் புலிகள் அமைப்பினரையும் எவ்வாறு ஒரு மித்து பார்க்க முடியும். நாட்டில் அரசியலமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு மைப் பாட்டை பாதுகாக்கவே முப்படையினர் போராடினார்கள். விடுதலைப் புலிகள் அமைப்பினர் நாட்டுக்கு எதிராக செயற்பட்டார்கள்.

முப்படையினரையும் விடுதலைப் புலிகளையும் ஒருமித்து பார்க்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தையிட்டு வெட்கமடைகிறேன். ஆகவே நினைவுத் தூபி அமைக்கும் தீர்மானத்தை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவேன்.

இலங்கை தேரவாத பௌத்த நாடு என்பதை மறுக்க முடியாது. நாடு முழுவதும் பௌத்த சின்னங்கள் உள்ளன. இதன் காரணமாகவே இலங்கை பௌத்த நாடு என்று குறிப்பிடுகிறோம். அதனை விடுத்து இனவாத அடிப்படையில் இலங்கை பௌத்த நாடு என்று குறிப்பிடவில்லை என அவர் தெரிவித்தார். (நி)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை சிங்கள அரசியல்வாதிகளே திட்டமிட்டனர்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

உயிர்த்தஞாயிறு குண்டு தாக்குதல்களை பலம்பொருந்திய சில சிங்கள அரசியல்வாதிகளே திட்டமிட்டனர் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



அல்சுஹிரியா அரபுக்கல்லூரியில் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா வழக்கில் சாட்சிகள் என கருதப்படக்கூடியவர்கள் உட்பட பலர் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்த டுவிட்டர் பதிவிற்கு அளித்துள்ள பதிலில் முன்னாள் ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இது முஸ்லிம்களிற்கு எதிரான நடவடிக்கை. இந்த நடவடிக்கை 2013 இல் அவர்களிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை போன்றது. அது மீண்டும் நிகழ்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை பலம்பொருந்திய சில சிங்கள அரசியல்வாதிகளே திட்டமிட்டனர்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விவகாரம், வைத்தியர் ஷாபி விவகாரம் போன்ற பல விடயங்கள் முஸ்லிம்களை ஆபத்தானவர்களாக சித்தரிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டன எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

# எல்லை நிர்ணய ஆணைக்குழு தவிசாளராக மீண்டும் கலாநிதி தவலிங்கம் நியமனம்


(கொழும்பு)

கலாநிதி தவலிங்கம் மீண்டும் எல்லைநிர்ணய ஆணைக்குழு தவிசாளராக ஜனாதிபதியால் மே 19 முதல் 3 வருட காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் பதவியில் மகிந்த தேசப்பிரிய முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழு தவிசாளராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



# இலங்கை தூதரகத்தின் எதிர்ப்பையும் மீறி கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி



(ஒட்டாவா)

கனடாவில் தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபியை அமைக்கும் முயற் சிகளிற்கு கனடாவிற்கான இலங்கை தூதரகம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கை யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தமிழர் களை நினைவுகூருவதற்காக கனடாவில் உள்ள இலங்கை தமிழ் சமூகத்தினர் நினைவுத்தூபியை அமைப்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளிற்கே இலங்கை தூதரகம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் எதிர்ப்பையும் மீறிபிரம்படன் மேயர் பட்ரிக் பிரவுன் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின்போது இழக்கப்பட்ட உயிர்களை நினைவு கூருவதற்கான தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளார் என டெய்லிமிரர் தெரிவித்துள்ளது. (நி)

# மீண்டும் அதிகரிக்கிறது கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை

(கொழும்பு)

இலங்கையில் கொவிட் தொற்றுக்குள்ளானவர்கரின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துத் வருவதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொவிட் தொற்றுக்குள்ளான மேலும் 13 பேர் நேற்று முன்தினம் கண்டறியப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் ஒரு கொவிட் இறப்பும் பதிவாகியுள்ளதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 5 இலட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

அதிலும் இந்த மாதம் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தே வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி சபையின் தலைவர் சம்பத் பிரசன்ன பெர்னண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு அடுத்ததாக ஜேர்மனியை சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே அதிகமாக வருகை தந்துள்ளனர். (நி)

# இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த தீர்மானம்

## ஷெஹான் சேமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த மாதம் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான மற்றும் அவசியமான பல பொருட்களுக்கே கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேநேரம் குறித்த விவாதத்தில் பேசிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதை 4 அல்லது 5 வருடங்களுக்கு நிறுத்த மாறு கேட்டுக்கொண்டார். (நி)

# புத்தகப்பை காலணிகளின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் புத்தகப்பைகள் மற்றும் காலணி ஆகியனவற்றின் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக பதில் நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் காலணி மற்றும் பைகளுக்கான விலையை 10 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட டொலர் பற்றாக்குறையினை தொடர்ந்து காலணி மற்றும் பைகள் உள்ளிட்ட சில பொருட்களுக்கான இறக்குமதி இடைநிறுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் தகுதிச்சுற்று அட்டவணை வெளியீடு

10 அணிகள் இடையிலான 13 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் நடைபெறவுள்ளது.

இந்த போட்டிக்கு சுப்பர் லீக் மூலம் புள்ளிப் பட்டியலில் டாப்-8 இடங்களை பிடித்த நியூசிலாந்து, நடப்பு சம்பியன் இங்கிலாந்து, வங்காளதேசம், இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான், தென் ஆபிரிக்கா ஆகிய 8 அணிகள்நேரடியாக தகுதிபெற்றுவிட்டன. மீதமுள்ள இரு அணிகளை தேர்வு செய்வதற்கு தகுதி சுற்று போட்டி நடத்தப்படுகிறது.

இந்த நிலையில், தகுதி சுற்று போட்டியில் விளையாடும் அணிகளின் பட்டியல் மற்றும் போட்டி அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதன்படி தகுதி சுற்று போட்டி அடுத்த மாதம் 18ஆம் திகதி முதல் ஜூலை 9-ஆம் திகதி வரை ஜிம்பாப்வேயில் 4 மைதானங்களில் நடைபெறவுள்ளது. (4)

International Cricket Council

# ஜடேஜாவின் பந்துவீச்சு திருப்புமுனையாக அமைந்தது- டோனி புகழாரம்



ஐ.பி.எல் தொடரில் லீக் சுற்றுகள் முடிவடைந்த நிலையில் முதல் குவாலிபயர் சுற்றில் சென்னை சுப்பர் கிங்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் நேற்று முன்தினம் மோதின. இந்த போட்டி சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற குஜராத் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதனையடுத்து முதலில் பட்டிங் செய்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 172 ரன்கள் எடுத்தது. அதன்பின் 173 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணி 157 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

இதனால் 15 ரன்கள் வித்தியாசத்தில் குஜராத் தோல்வியடைந்தது. இதன் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 10ஆவது முறையாக இறுதி போட்டிக்கு தகுதி பெற்றது.

இந்நிலையில், குஜராத் அணிக்கு எதிராக ரவீந்திர ஜடேஜா சிறப்பாக பந்து வீசினார் என சென்னை அணியின் கப்டனான டோனி பாராட்டியுள்ளார். இது குறித்து டோனி கூறியதாவது:- நாங்கள் டாஸ் இழந்தது கடைசியில் எங்களுக்கு சாதகமாகவே அமைந்துவிட்டது. இது எங்களுக்கு மற்றொரு இறுதி போட்டி என சாதரணமாக கூறிவிட முடியாது.

கடந்த 2 மாதங்களாக இதற்காக நாங்கள் கடினமாக உழைத்துள்ளோம். அனைவரின் பங்களிப்பும் இதில் உள்ளது.

சேசிங்கில் குஜராத் அணி வலுவானது என்பதால் தான் முதலில் பந்து வீச விரும்பியதாக டாசின் போது கூறியிருந்தேன். ஜடேஜாவின் பந்து வீச்சு போட்டியில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

ஆடுகளத்தின் தன்மை சுழற்பந்து வீச்சிற்கு சாதகமாக இருந்தால் அவரது பந்துவீச்சை எதிர்கொள்வதே கடினம். அதேபோல் பட்டிங்கின் போது கடைசி நேரத்தில் மொய்ன் அலியுடன் அவர் கூட்டணி சேர்ந்து விளையாடியதையும் மறந்து விடக் கூடாது. கடைசி நேரத்தில் எடுத்த ரன்கள் எங்களுக்கு உதவியாக இருந்தது என அவர் கூறினார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2836

மிதுன்




மதுசன்




அர்ச்சுன்




சாமந்தி




சுஜீவா




யசிந்தா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிப் பாதுகாப்பு வாரத்தையொட்டி வவுனியாவில் மாணவர்கள் பேரணி

(வவுனியா)

வீதிப் பாதுகாப்பு வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களின் விழிப்புணர்வு பேரணி வவுனியாவில் நேற்று இடம் பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆ.லோகேஸ்வரன்ஆலோசனையில் பாடசாலை வீதிப் பாதுகாப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இவ்விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலை முன்றலில் ஆரம்பமாகி, மணிக்கூட்டுச் சந்தி வரை சென்று அங்கிருந்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்திருந்தது.

இவ் ஊர்வலத்தில் வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன், பாடசாலை அதிபர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (4-6)




# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1947 . 09 . 13

மறைவு 2018 . 05 . 20



அமரர்.

**சின்னத்தம்பி பொன்னம்பலம் (மகாலிங்கம்)**

(கார் உரிமையாளர்-பஸ்தரிப்பு நிலையம்-சுன்னாகம்)

திதி:-பூர்வபக்க ஷஷ்டி

உழைப்பின் சிகரமாய்
உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவரே!
எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவரே!
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
அழியாது என்றும் உம் நினைவுகள்.

ஏழாலை மேற்கு, சுன்னாகம்,
(விதுஜா கூல் ஸ்பொட்),
K.K.S வீதி, மல்லாகம்.

(15599)

என்றும் உங்கள் நீங்காத
நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.


## டொலரின் பெறுமதி மேலும் குறைவடைந்தது

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி நேற்றைய தினம் டொலரின் கொள்வனவு விலை 297.98 ரூபாவாகவும் விற்பனை விலை 311.23 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 299.19 ரூபாவாகவும் விற்பனை விலை 312.33 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (நி)






# இராசிபலன்

25.05.2023
வைகாசி 11, வியாழக்கிழமை
சஷ்டி பின்னிரவு 4.48 மணிவரை
பூசம் பிற்பகல் 5.42 மணிவரை

சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சஷ்டி விரதம், அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்

**வளவன்**

**மேஷம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரும் நாள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**கடகம்** — தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனைகளைக் கேட்பீர்கள், பயணங்கள் கைகூடும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**துலாம்** — ஆற்றல் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், எதிர்பாராத பணவரவுகள் வந்து சேரலாம், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்** — மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், செய்தொழிலில் மேன்மையுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள்.

**ரிஷபம்** — நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், அரச வழியில் அனுகூலமுண்டு, குடும்பத்தினர் பாராட்டும் வகையில் காரியங்களைச் செய்து முடிப்பீர்கள்.

**சிம்மம்** — திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** — வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, எதிர்பார்த்த காரியமொன்று இன்று நடைபெற்று மகிழ்ச்சி தரும், புதிய திட்டங்கள் கைகூடும்.

**கும்பம்** — உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**மிதுனம்** — உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரும், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** — குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**தனுசு** — பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை.

**மீனம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எந்த நல்லதையும் செய்யாத ஒவ்வொருவரும் குற்றவாளியே.

# கலாநிதி. இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் திறந்து வைப்பு





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலாநிதி.கா.இந்திர பாலா தொல்லியல் அருங்காட் சியகம் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலா நிதி.இந்திரபாலா தொல்லி யல் கண்காட்சியும் தொல்லி யல் அருங்காட்சியக இணை யத்தளமும் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவினால் அங் குரார்ப்பணம் செய்து வைக்கப்பட் டது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதி பதி பேராசிரியர் சி.ரகுராம், வரலாற்றுத்துறை ஓய்வுநிலை சிரேஷ்ட பேராசிரியர் பரமு புஷ்ப ரட்ணம், வரலாற்றுத்துறை தலைவர் சாந்தினி அருளானந் தம், பேராசிரியர் மௌனகுரு, ஏனைய பீடாதிபதிகள், விரிவு ரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மத்திய கலாசார நிதியத்தினர், தொல்லி யல் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல் அருங் காட்சியகம் வரலாற்றுத்துறை முதல் பேராசான் கலாநிதி. கா.இந்திரபாலாவால் அடித்தள மிடப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்கத் தூதரகத்தினதும் மத்திய கலா சார நிதியத்தினதும் அனுசர ணைகளாலும் தூர நோக்குடன் நவீன அருங்காட்சியகமாக பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் உருப்பெறச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(4-6-33-104)

# பிரித்தானியத் தூதுவர் பொதுநூலகத்திற்கு விஜயம்



(அராலி)

இலங்கைக்கான பிரித் தானியத் தூதுவர் யாழ்ப்பாணம் பொதுநூலகத்திற்கு வருகை தந்து நூலகத்தினைப் பார்வை யிட்டார்.

இலங்கைக்கான பிரித்தா னியத் தூதுவர் சரா ஹல்ரன் இந்தியா மற்றும் இந்து சமுத் திரப் பிராந்தியத்துக்கான இயக்குநர் பென் மெலோர் ஆகி யோர் நேற்று முன்தினம் யாழ் ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்து பல்வேறு தரப் பினரைச் சந்தித்து கலந்துரையா டினர்.

அத்தோடு யாழ்ப்பாணம் பொதுநூலகத்திற்கு வருகை தந்து நூலகத்தினையும் பார் வையிட் டனர். (4-6-104)

# யாழில் உணவகம் ஒன்றிலிருந்து பழுதடைந்த 20 கிலோ உணவு மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வைத்திய சாலை வீதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் இருந்து கோழி இறைச்சி, றொட்டி, சோறு என சுமார் 20 கிலோ கிராம் உணவுகளும் பழுதடைந்த பழ ங்களும் பொதுச் சுகாதார பரி சோதகரால் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த உணவகத்தில் உணவினை வாங்கிய நபர் ஒருவர், அங்கு தனக்கு பழுத டைந்த உணவையே விற்றனர் என யாழ். மாநகர பொதுச் சுகா தார பரிசோதகருக்கு முறையிட் டுள்ளார்.

அதனை அடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த உணவகத்தினை பொது சுகாதார பரிசோதகர் சோதனை யிட்ட போது, உணவகத்தில் இருந்து பழுதடைந்த உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டதுடன், உணவகத்தில் உணவை கையா ளும் தொழிலாளர்கள் இருவர் மருத்துவச் சான்றிதழ் பெறாமை, மற்றும் கடையில் சில சுகாதார சீர்கேடுகள் என்பவை பொதுச் சுகாதார பரிசோதகரால் அடை யாளம் காணப்பட்டன.

அதனை அடுத்து உணவகத் தில் மீட்கப்பட்ட சான்றுப் பொரு ட்களை யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் அன் றைய தினமே சமர்ப்பித்து, உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தார்.

அதனை தொடர்ந்து நடை பெற்ற வழக்கு விசாரணை களை அடுத்து, உரிமையா ளரை ஒரு இலட்ச ரூபாய் பெறும தியான சரீர பிணையில் செல்ல அனுமதித்த மன்று, மீட்கப்பட்ட உணவு பொருட்களை அழிக்கு மாறு கட்டளையிட்டதுடன் வழக் கினை எதிர்வரும் 15 ஆம் திகதி க்கு ஒத்திவைத்தது. (4-6-33)

# கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா நிகழ்வு

(கொழும்பு)

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதியின் நூற்றாண்டு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி காலை 9 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் மலையக மக்கள் முன்னணி யின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் ச.சிவலிங்கம் தலை மையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், மக்கள் நீதி மய்யம் தமிழ்நாடு மாநில செயலாளர் சட்டத்தரணி எம்.சிறிதர், ராமநாதபுரம் மாவ ட்டம் தி.மு.க மாணவர் அணித் தலைவர் எம்.நாகரத்தினம், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், மனோ கணே சன், வே.இராதகிருஷ்ணன், செல்வம் அடைக்கலநாதன், இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் எம். பி.ஆர். யோகராஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார் என நிகழ்வின் ஏற்பாட்டாளர் மணவை அசோ கன் அறிவித்துள்ளார் (4)



பொலிஸ் தலைமையகத்தின் மோட்டார் போக்குவரத்து பிரிவின் பங்கேற்புடன் யாழ்ப்பாணத்தில் வீதியோர விழிப்புணர்வு செயற்றி ட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்று காலை குறித்த நிகழ்வு இடம்பெற் றது.

வீதியோர விழிப்புணர்வு செயற்றிட்டம் சார்பாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் வினாடி வினாப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும் வீதி விபத்து தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வீதி நாடகங்களும் நடத்தப்பட்டன. (படம்:-சிவசாந்தன்)



யாழ்.நீரிழிவுக் கழகத்தினரின் கோரிக்கைக்கு அமைவாக ஜேர்மனியை சேர்ந்த துரைசிங்கம் மோகனதாஸின் ஒரு லட்சம் ரூபாவும் லண்டனைச் சேர்ந்த m.m.குடும்பத்தினர் அறுபதாயிரம் ரூபாவும் யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் நீரிழிவு நோய் வகை ஒன்றுக்காக சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களுக்கு இன்சுலின் ஊசி மருந்து கொள்வனவு செய்வதற்காக ஜேர்மன் வெற்றி மணி பத்திரிகை நிறுவனத்தின் அதிபர் சிவகுமாரினால் யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியிடம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின் தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற் கொள்ள வேண்டிய தேவை யுடைய நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் நன்கொடை யாளர்களின் உத வியுடன் இலவசமாக கண்புரை சத்திரசிகிச் சையினை மேற் கொள்வதற்கு ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான நோயாளர்க ளைத் தெரிவுசெய்யும் கண் பரிசோதனை முகாம் நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனி க்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் தெல் லிப்பழை ஆதார வைத்தியசாலையிலும் புரம் ஆரம்ப சுகாதார மருத்து வப் பிரிவிலும் நடைபெறவுள் ளன.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண் டிய தேவையுள்ள நோயாளர் கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங் கள் பெயர்களைப் பதிவு செய்யு மாறு யாழ்ப்பாணம் பிராந் திய சுகாதார சேவைகள் பணி ப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள் ளார். (4-6)

# இலவச பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திரு முறை மன்றத்தால் இலவசமாக பண்ணுடன் கூடிய திருமுறை வகுப்பு வார இறுதி சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலை 4.30 மணிமுதல் 5.30 மணிவரை சிவதொண்டன் நிலையத் திரு முறை மண்டபத்தில் இடம் பெற்று வருகிறது.

இவ் வகுப்பில் ஆர்வம் உள்ளவர்கள் இதில் கலந்து கொள்ள முடியும் என அகில இலங்கைத் திருமுறை மன்றத் தின் செயலாளர் அறிவித்துள் ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் எட்டுக் கால்களுடன் பிறந்த அதிசய கன்றுக்குட்டி



(நெளுக்குளம்)

வவுனியா பாலமோட்டை பகுதியில் உள்ள கோவில் குஞ்சுக்குளம் கிராமத்தில் அண்மையில் மாடு ஒன்று எட்டு கால்களுடன் கன்று ஒன்றினை ஈன்று மக்களை அதிசயிக்க வைத்துள்ளது.

குறித்த கிராமத்தில் ஆறுமுகம் ஞனேஸ்வரன் என்பவர் வருமானத்தினை ஈட்டுவதற்கு மாடுகளை வளர்த்து வருகின்றார். குறித்தநபர் வளர்த்து வரும் மாடு எட்டு கால்களுடன் கன்று ஒன்றினை பிரசவித்த நிலையில் குறித்த கன்று தற்போது ஆரோக்கியமாக இருப்பதாகவும் அதற்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் நேற்று கன்றினை பார்வையிட்டு மருத்துவ பரிசோதனை மேற்கொண்ட கால்நடை வைத்தியர் தெரிவித்துள்ளார். இந் நிலையில் கிராம மக்கள் சென்று அதிசய கன்று குட்டியை ஆர்வத்துடன் பார்வையிட்டு வருவகின்றனர்.(4-6-299)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 500 | 500 | 550 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 | 300 |
| தக்காளி | 350 | 350 | 350 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 450 | 350 | 400 | 400 |
| கரட் | 260 | 330 | 350 | 400 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 160 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 360 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 450 | 500 | 600 | 600 |
| வெண்டக்காய் | 200 | 160 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 400 | 300 | 450 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 260 | 240 | 400 |
| கறிமிளகாய் | 300 | 300 | 380 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 550 | 500 |
| கத்தரிதம்புள்ள | 500 | 400 | 600 | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 280 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 500 | 250 | 600 | 600 |
| முள்ளங்கி | 100 | 180 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | -- | -- |

### வற்றாப்பளை பொங்கல் உற்சவம்

# உணவு கையாளும் வியாபார நிலையங்களுக்கான அறிவுறுத்தல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வற்றாப்பளை கிராமத்தில் அமைந்துள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி நடைபெற இருக்கின்றது.

எனவே அதற்கான முன் ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்திலுள்ள உணவு கையாளும் வியாபார நிலையங்களுக்கான அறிவுறுத்தல் ஒன்றினை முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி விடுத்துள்ளார்.


உணவகம் (ஹோட்டல்) சர்பத் கடை தவிர்ந்த ஏனைய உணவு கையாளும் நிலையங்கள் (ஐஸ்கிறீம் கடை, ஐஸ்கிறீம் வாகனம், பூந்தி இனிப்பு வகைகள் மற்றும் மிக்சர் கடைகள் ) இவை அனைத்தும் தத்தமது பிரதேச உள்ளூராட்சி சபைகளின் அனுமதியினை பெற்றிருத்தல் வேண்டும்.

ஐஸ்கிறீம் உணவகங்கள், தேநீர், பூந்தி இனிப்பு, மிக்சர், சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனுமதி பெற்ற ஐஸ்கிறீம் கடைகளில் மாத்திரமே ஐஸ்கட்டிகளை கொள்வனவு செய்தல் வேண்டும். அத்துடன் அதற்கான பற்றுச்சீட்டினை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

உணவகத்திற்கும் சர்பத் கடைகளுக்குமான உரிமையாளர்கள் எதிர்வரும் 3 ஆம் திகதி மாலை 4. மணிக்கு் வற்றாப்பளை பொது சுகாதார பரிசோதகர் உற்சவகால அலுவலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கட்டாயம் பங்கு பற்றுதல் வேண்டும்.

காவடி உரிமையாளர்கள் அயடின் கரைசலில் செடில்களை கட்டாயமாக கழுவி பயன்படுத்த வேண்டும். சிகரெட், புகையிலை, மதுசாரம் ஆலய வளாகத்தினுள்ளே வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். (4-6-299)

# யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் துறையினரால் முன்னெடுக்கப்படவுள்ள பூச்சியியல் தினம்– 2023




பூச்சியியல் என்பது பூச்சிகள் பற்றியும் அவற்றுடன் மனிதர்கள் மற்றும் பிற அங்கிகளுக்கிடையேயான தொடர்பு பற்றியும் கற்பது ஆகும். 1974 ஆம் ஆண்டிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையானது கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மூலம் பூச்சியியல் துறையில் பாரியதொரு பங்களிப்பை செய்து வருகின்றது. விலங்கியல் துறையின் முதல் தலைவரான மறைந்த வாழ்நாள் பேராசான் வி.க.கணேசலிங்கம் அவர்கள் 1975 - 2001 வரை இத்துறையின் வளர்ச்சிக்குஅளப்பெரிய பங்காற்றியது மட்டுமின்றி விலங்கியல் துறை பூச்சியியலில் சிறந்து விளங்க வித்திட்டவராகவும் உள்ளார். துறைத்தலைவர் பதவிக்கப்பால் இவர் விஞ்ஞான பீடாதிபதியாக இரண்டு முறையும் (1988 -1991, 1996 - 1999) பதில் துணைவேந்தராகவும் (1988) செயலாற்றினார்.

இவர் பூச்சியியல் ஆராய்ச்சியில் அதிக நாட்டம் கொண்டிருந்தது மட்டுமின்றி தனது வழிகாட்டலில் பல முதுவிஞ்ஞானமாணி பட்ட மாணவர்களையும் உருவாக்கியுள்ளார். ஆரம்பகாலத்தில் பூச்சி உடற்றொழிலியல் ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த இவர் பின்னர் பூச்சி பீடைக் கட்டுப்பாட்டில் ஆர்வம் கொண்டு பல ஆய்வுகளை இறுதி வரை மேற்கொண்டார். பூச்சியியல் துறையில் இலங்கையில் முன்னிலை ஆய்வாளர்களில் ஒருவராக திகழ்ந்தது மட்டுமல்லாமல் தனது ஆராய்ச்சி முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு பல உசாத்துணை நூல்களையும் பிரசுரித்துள்ளார்.

பூச்சியியலில் இவர் கொண்ட ஆர்வமும் ஈடுபாடும் பல புலமைப் பரிசில்களை வென்று ஐக்கிய இராச்சியத்திலுள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்திலும் லண்டனிலுள்ள இயற்கை வரலாற்று நூதனசாலை மற்றும் லண்டன் பல்கலைக்கழத்திலும் மேலும் ஆராய்ச்சிகளில் ஈடுபட வழிவகுத்தது. மேலும் இவரின் வழிகாட்டலில் பல மாணவர்கள் பூச்சியியலில் ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்குவித்ததுடன் இன்று பூச்சியியலில் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறை முன்னிலை வகிக்கவும் வழிகோலியது.

இவ்வாறு பல அளப்பரிய சேவைகளைப் புரிந்து யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் நீங்கா இடம்பெற்ற பேராசிரியர் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி அன்று லண்டனில் காலமானார். இவரது இவ்வாறானபாராட்டத்தக்க சேவைகளை நினைவு கூரும் முகமாக இவர் மறைந்த இம்மாதத்தில் **"பூச்சிகளின் உலகம்:சூழற் தொகுதிகளின் எதிர்காலத்தை பூச்சிகள் மூலம் ஒளிரச் செய்வோம்"**.எனும் கருப்பொருளில் பூச்சியியல் தினத்தை (Entomology Day) வரும் நாளை 26 ஆம் திகதி அன்று யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் (Library auditorium)கொண்டாடத் தீர்மானித்துள்ளோம். இத் [illegible] வர்களிடையே உருவாக்குவதற்கும் அவர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் முகமாகவும் நிழற் படக்கலைப் போட்டி (Photography competition) மற்றும் சுவரொட்டி தயாரிப்பு போட்டி (Poster competition) போன்றவை நடாத்தப்பட்டு வெற்றியாளர்களிற்கு இப்பூச்சியியல் தினத்தன்று பரிசளிக்கவுள்ளோம். மேலும் இத்தினத்தன்று **யாழ்ப்பாண பூச்சியியல் சமூகம் (Jaffna Ento mological Society (JES))** எனும் அமைப்பு ஒன்றினையும் ஸ்தாபிக்க உள்ளோம். இதன் மூலம் பூச்சிகள் தொடர்பான ஆய்வுகளைப் பல்வேறு மட்டத்தில் விஸ்தரிக்கவும் மக்கள் மத்தியில் பூச்சிகள் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதுடன் பூச்சிகளினால் வழங்கப்படும் சூழலிற்கான நன்மைகளை மேலும் அதிகரிக்க முடியும் என நாம் நம்புகின்றோம்.

இந் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக ஜப்பான் நாட்டைச் சேர்ந்த Kyushu பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் Ogata Kazuo அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். பூச்சியியலில் ஆர்வம் கொண்ட இவர் எறும்புகளின் பாகுபாட்டியல் (Taxo nomy) மற்றும் சூழலியல் (Ecology) துறைகளில் தேர்ச்சி பெற்றவராவார்.

தற்போது இவர் உலர் வலயத்தில் விவசாய ஆராய்ச்சி மற்றும் கல்வி கொள்திறன் மேம்பாடு எனும் செயற்றிட்டத்தின் தலைமை ஆலோசகராக பதவி வகிக்கின்றார். இவ்வாறு பூச்சியியலிலும் பல சமூக சேவைகளிலும் சிறந்து விளங்கும் பேராசிரியர் Ogata Kazuo அவர்களை இந்நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராகக் கொள்வதில் நாம் மிகவும் பெருமிதம் கொள்கின்றோம்.

**விலங்கியல் மாணவ ஒன்றியம்**
(Zoological Student'sAssociation)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 187





வந்தவர்கள் இத்தகைய அக்கிரமங்களைச் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள்! அடடா! சேந்தன் அமுதனும் அவனுடைய அருமை அன்னையும் எவ்வளவு அரும்பாடுபட்டு இந்த நந்தவனத்தை வளர்த்திருக்க வேண்டும்? அவ்வளவும் பாழாய்ப் போய்விட்டதே!

நந்தவனம் அழிந்ததில் அனுதாபம் சட்டென்று விலகியது. தன்னுடைய அபாயகரமான நிலைமை நினைவு வந்தது. ஒற்றர்களும் கோட்டைக் காவல் வீரர்களும் இங்கே சமீபத்தில் எங்கேயாவது காத்திருந்தால் என்ன செய்வது? அவர்களை ஒரு கை பார்த்துச் சமாளிக்க வேண்டியதுதான். நல்லவேளையாக, அதோ நமது குதிரை, கட்டிய மரத்திலேயே இன்னும் இருக்கிறது! ஒருவேளை தன்னைப் பிடிப்பதற்காகவே அதை விட்டு வைத்திருகிறார்களோ? எப்படியிருந்தாலும் என்ன செய்ய முடியும்? இவனை இக் குடிசையில் உள்ள நல்ல மனிதர்களிடம் ஒப்புவித்து விட்டுக் குதிரையில் ஏறித்தட்டிவிட வேண்டியதுதான். இங்கே புறப்படும் குதிரை பழையாறை போய்த்தான் நிற்க வேண்டும்.

மெள்ள மெள்ள அடிமேல் அடி வைத்து நடந்து குடிசை வாசலை அடைந்தான். வாசல் திண்ணையில் படுத்திருந்த சேந்தன் அமுதனைத் தட்டி எழுப்பினான். தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு எழுந்த அமுதனுடைய வாயைப் பொத்தினான்.

பிறகு மெல்லிய குரலில் சொன்னான் "தம்பி! நீதான் எனக்கு உதவி செய்ய வேண்டும். பெரிய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இவன் என் அருமை சிநேகிதன். கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தமாறன். நான் வரும் வழியில் யாரோ இவனை முதுகிலே குத்திப் போட்டிருந்தார்கள். எடுத்து வந்தேன்" என்றான்.

"படுபாவிகள்! முதுகிலே குத்தியிருக்கிறார்களே! எப்பேர்பட்ட சுத்த வீரர்கள்!" என்றான் அமுதன்.

பிறகு, "இவனை என்னால் முடிந்த வரை பார்த்துக் கொள்கிறேன். இன்று மாலையிலிருந்து கும்பல் கும்பலாகப் பல வீரர்கள் வந்து உன்னைத் தேடிவிட்டுப் போனார்கள். அவர்களால் நந்தவனமே அழிந்து போய் விட்டது. போனாலும் போகட்டும் நீ தப்பிப் பிழைத்தால் சரி. நல்லவேளையாக உன் குதிரையை அவர்கள் விட்டுப் போய் விட்டார்கள். குதிரையில் ஏறி உடனே புறப்படு!"

"அப்படித்தான் என் உத்தேசமும். ஆனால் இவன் உயிரைக் காப்பாற்ற ஏதேனும் செய்ய வேண்டும்!"

"அதைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம். என் தாயார் இம்மாதிரி விஷயங்களில் கைதேர்ந்தவள். காயங்களுக்குச் சிகிச்சை செய்ய அவளுக்கு நன்றாய்த் தெரியும்!" என்று சொல்லி, சேந்தன் அமுதன் குடிசையின் கதவை இலேசாக இரண்டு தட்டுத் தட்டினான். உடனே கதவு திறந்தது. சேந்தன் அமுதனுடைய அன்னை வாசற்படியில் நின்றாள்.


கந்தமாறனை இருவருமாகத் தூக்கிக் கொண்டு போய் உள்ளே கூடத்தில் போட்டார்கள். கைவிளக்கின் வெளிச்சத்தில் சேந்தன் அமுதன் தன் அன்னையுடன் சமிக்ஞையினால் பேசினான். அதை அவள் நன்கு அறிந்து கொண்டதாகத் தோன்றியது. கந்தமாறனை உற்றுப் பார்த்தாள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## தொலைந்த மூக்கு



அண்ணன் தங்கை இருவருக்கும் எப்போதும் சண்டைதான். அண்ணன் பரத் மகாகுறும்பன். இரண்டாம் வகுப்பில் படிக்கின்றான். தங்கை நந்தினி இன்னும் பள்ளிக்கு செல்லவில்லை.சின்னப் பெண். தாய் தந்தை இருவரும் பணி புரிகின்றார்கள். அப்பத்தாவும் தாத்தாவும் இவர்களுடன் இருக்கிறார்கள். பரத் , நந்தினி குடும்பம் இருப்பது ஒரு அடுக்குமாடி குடியிருப்பில். அந்த குடியிருப்பில் மொத்தம் 5 மாடி. மூன்றாவது மாடியில் இவர்கள் குடியிருக்கின்றார்கள்.

ஒரு சனிக்கிழமை காலை அப்பாவும் அம்மாவும் பணிக்கு சென்றபின்னர் பரத்தும் நந்தினியும் விளையாடிக் கொண்டு இருந்தனர். தாத்தா வெளியே தன் நண்பர்களைக் காண கிளம்பினார்

"பரத் தங்கையை சீண்டாமல் விளையாடு. சண்டை போட்டுக்க கூடாது சரியா? தாத்தா சீக்கிரம் வந்து விடுகின்றேன்"

"சரிங்க தாத்தா" இருவரும் விளையாட்டு சாமான்கள் எடுத்துக்கொண்டு இருவரும் மொட்டைமாடியில் விளையாடச் சென்றனர். நிழலாக இருந்த ஓரத்தில் விளையாடினர்.எந்த பொருள் பரத் எடுத்தாலும் உடனே நந்தினி அது வேண்டும் என்பாள். அப்போது திடீர் என்று பரத் "உஷ் உஷ்" என்று கத்தியபடி ஓடினான்.

"அண்ணா என்ன ஆச்சு?" பயத்துடன் அண் ணன் சட்டைக்கு பின்னால் ஒளிந்து கொண்டாள்.

"ஒரு பருந்து வந்தது பார்த்தியா?" "இல்லையே" "பெரிய பருந்து"

"அச்சோ அப்புறம்?. ஏன் விரட்டிக்கொண்டு ஓடினீர்கள்?"

"அழக்கூடாது சரியா. அந்த பருந்து உன் மூக்கை கடிச்சி எடுத்துக்கொண்டு போய் விட்டது. அது தான் துரத்திக்கொண்டு சென்றேன். அதற்குள் பறந்தே போய்விட்டது"..

இவன் சொல்லி முடிப்பதற்குள் நந்தினி அழ ஆரம்பித்துவிட்டாள்.. "அம்மா என் மூக்கு..என் மூக்கு" என்று அழுதபடி படிக்கட்டுகளில் இறங்கி தன் வீட்டிற்கு சென்றாள். அவள் விட்ட சத்தத்திற்கு அந்த கட்டிடத்தில் உள்ள அனைவருமே பயந்து விட்டனர். யார் என்ன சொல்லியும் அழுகை நின்றபாடில்லை. அப்பத்தா அதெல்லாம் ஒன்றும் இல் லை . அ ண் ண ன் விளையாடுகிறான் என்றாள் கேட்கவே இல்லையே. அழுதபடியே இருந்தாள். கை கால் உதைத்தாள்.

தாத்தா அந்த சமயம் வீட்டிற்குள் வந்தார். "என்னாச்சு பாப்பாக்கு? ஏன் என் தங்கம் அழுகின்றது?"

தன் அழுகையை நிறுத்தி "தாத்தா, நானும் அண்ணனும் விளையாடிக் கொண்டு இருந்தோம்.ஒரு பெரிய பருந்து கறுப்பு நிறத்தில் வந்தது. என் மூக்கை" மீண்டும் அழுகை

"அழாமல் சொன்னால் தானே புரியும்"

"என் மூக்கை கடிச்சி எடுத்துக்கொண்டு போய் விட்டது..ம்ம்ம்..ம்ம்ம்"

நிலைமையை புரிந்து கொண்டார் தாத்தா. "ஓ உன் மூக்கு தானா அது? " என்றார்.

அமைதியானாள் நந்தினி. "நான் தெருவில் வந்த போது ஒரு பருந்து வந்து என்னிடம் பேசியது.ஒரு அழகான குட்டி பெண்ணின் மூக்கை எடுதத்துக் கொண்டு வந்துவிட்டேன். பாவம் அவள் நல்ல பெண், சமத்து பெண், என்று சொல்லிவிட்டு மூக்கை என்னிடம் கொடுத்து விட்டு பறந்து சென்றது."

"இதோ பத்திரமாக என் பாக்கெட்டில் வைத்திருக்கிறேன்.எங்கே கிட்டவா..கண்ணை மூடிக் கொள்.."

பாக்கெட்டில் இருந்து ஏதோ எடுப்பது போல் பாவனை செய்து அவள் முகத்தில் வைத்து அழுத்தினார்.

"ஆகா. மூக்கு ஒட்டியாச்சே..போய் கண்ணாடியில் பார்." நந்தினி கண்ணாடியை நோக்கி ஓடினாள்.." படவா.. குழந்தையை ஏன் இப்படி ஏமாற்றுகிறாய்" என்று செல்லமாக பரத் கன்னத்தை கிள்ளினார் தாத்தா..

"ஹையா மூக்கு வந்துடுச்சே.. ஜாலி.. ஜாலி.. அண்ணா மூக்கு வந்துடுச்சு ஜாலி ஜாலி" மீண்டும் மாடிக்கு சென்று விளையாட துவங்கினர் ஆனந்தமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மனிதனுடைய இலட்சியம் என்னவென்று அறிந்து கொண்டால் போதும். அதனைக் கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம். —ஹேரம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் அருங்காட்சியகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் நேற்று 24ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறையின் முதலாவது பேராசிரியர் கா.இந்திரபாலா அவர்கள் வரலாற்றுத்துறைக்கும் தொல்லியல் சார்ந்த ஆய்வுகளுக்கும் காத்திரமான பணியை வழங்கியவர்.

அவர் எழுதிய **இலங்கையில் தமிழர்** எனும் நூல் எம் தமிழினத்தின் தொன்மையை, செழுமையை, வாழ்வியலை ஆதாரபூர்வமாக ஆவணப்படுத்தும் பொக்கிசம்.

அவர் எழுதிய இலங்கையில் தமிழர் என்ற நூலை வலம்புரி நாளிதழ் தொடராக வெளியிட்டிருந்ததை இந்நேரத்தில் நினைவுபடுத்துவது பொருத்துடையது.

இவ்வாறு பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் வரலாற்றுத் துறைக்கு ஆற்றிய சேவையை இடையறாது தொடர்ந்த பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் அவர்களின் பணி மகத்தானது. அதனை ஈழத் தமிழினம் ஒருபோதும் மறந்து விடமாட்டாது.

உண்மை. பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்கள், எங்கள் தமிழர் தேசத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகள், ஆய்வுகள், அவற்றால் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள் இந்த நாட்டில் எங்கள் இனத்தின் வரலாற்றுத் தொன்மை எத்தகையதென்பதை நிரூபித்து நிற்கிறது.

தவிர, அகழ்வராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி, துறைசார் நிபுணர்கள் மூலம் அவற்றின் வரலாற்றுக் கால அளவுகளையும் – அதனூடு தமிழ் மக்களின் வாழ்வியல் மற்றும் பண்பாட்டுப் பெறுமானங்கள், வழிபாட்டுத் தொன்மை என்பவற்றை ஆதாரப்படுத்திய பெருமையும் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்களைச் சாரும்.

இந்த வகையில் இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி கா.இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டிருப்பது மிகப்பெரும் நம்பிக்கையைத் தருவதுடன் எங்கள் வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளை ஆவணப்படுத்தவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் உரிய இடம் இல்லையே என்ற மனக்குறையையும் நிவர்த்திக்கிறது.

ஆம், எங்கள் தமிழ் இனத்தின் பெரும் சொத்தாக இருக்கக்கூடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எங்கள் தொல்லியல் சான்றுகளை, வரலாற்று ஆதாரங்களை, எங்கள் வாழ்வியல் முறைமைகளை, கலை, கலாசார, பண்பாட்டு அடையாளங்களைப் பேணிப் பாதுகாப்பதென்பது மிகவும் அவசியமானது. பெறுமதியானது.

அந்தப் பணி நேற்றைய தினம் ஓர் அங்கீகாரத்துடன் தொல்லியல் அருங்காட்சியகமாக மலர்ந்துள்ளது.

இந்தப் பணியை முன்னெடுத்த அத்தனை பேரும் வரலாற்றுப் பணி செய்தவர்கள் ஆவர்.

இந்த தொல்லியல் அருங்காட்சியகம் தமிழினத்தின் வரலாற்றை எடுத்தியம்பும் பெருங்காட்சியகமாக அமைய வேண்டும்.

இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையை சிறப்புத் துறையாகக் கற்று இன்று உலகமெலாம் பரந்திருக்கும் நம்மவர்கள் பேருதவி புரிய வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# தமிழர்களில் கரிசனை இருக்குமாயின் கனடாவில் ஈழத்தை ஸ்தாபிக்கலாம்

## கனடா பிரதமரின் அறிக்கை தொடர்பில் சரத் வீரசேகர

கனடாவில் வாழும் இலங்கை தமிழர்களின் அனுதாபத்தை பெற்றுக்கொள்ளும் அரசியல் நோக்கத்துடன் கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ இலங்கை தொடர்பில் தவறான கருத்தை தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்கள் தொடர்பில் அவருக்கு உண்மையில் கரிசனை இருக்குமாயின் கனடாவில் ஈழத்தை ஸ்தாபித்துக் கொள்ளலாம்.

மனித உரிமைகள் என்ற போர்வையில் விடுதலை புலிகள் அமைப்பின் இலக்கை அடைய டயஸ் போராக்கல் செயற்படுகிறார்கள் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பந்தயம், சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றிய கூட்டமைப்பின் உறுப்பினர் எஸ்.சிறிதரன் குறிப்பிட்ட ஒரு சில விடயங்களை மேற்கோள்காட்டி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

உலகளாவிய ரீதியில் மிக கொடிய அமைப்பாக கருதப்பட்ட தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பை முடிவுக்கு கொண்டு வந்து 14 ஆண்டுகளை கடந்துள்ளோம் பயங்கரவாதத்தை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

இராச்சியத்தை வீழ்த்தும் வகையில் செயற்பட்ட விடுதலை புலிகள் அமைப்பை நாட்டுக்காகவே முடிவுக்கு கொண்டு வந்தோம்.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் நாட்டில் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன நல்லிணக்கம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

புலம் பெயர்ந்து வாழும் டயஸ்போராக்கல் மனித உரிமைகள் என்ற போர்வையில் விடுதலை புலிகள் அமைப்பின் நோக்கத்தை அடைய முயற்சிக்கிறார்கள். இதற்காக ஐரோப்பிய நாடுகள் ஊடாக அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் கனடா நாட்டு பிரதமர் வெளியிட்ட கருத்து முற்றிலும் தவறானது. அரசியல் நோக்கத்தை முன்னிலைப்படுத்தியே அவர் இவ்வாறான கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார். இவரது கருத்துக்கு இலங்கை வெளிவிவகாரத் துறை அமைச்சு வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

கடனாவில் புலம் பெயர் தமிழர்கள் வளம் பெற்றுள்ளார்கள். இவர்களின் அனுதாபத்தை பெற்றுக் கொள்வதற்காகவே கனடாவின் பிரதமர் இலங்கை தொடர்பில் முறையற்ற கருத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையை காட்டிலும் கனடா பாரிய நிலப்பரப்பை கொண்டுள்ளது. ஈழத்தமிழர்கள் தொடர்பில் கடனாவின் பிரதமருக்கு உண்மையில் கரிசனை, அக்கறை காணப்படுமாக இருந்தால் கனடாவில் ஈழ இராச்சியத்தை ஸ்தாபித்துக் கொள்ளலாம் என்றார். (ம-7,9)

## திடீர் குளவிக்கொட்டு தாக்கத்தால் மாணவர்கள், பெற்றோர் பாதிப்பு

பண்டாரவளை பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பண்டாரவளை மைதான பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவமானது நேற்று பண்டாரவளை - ஓபட எல்ல பிரதேச பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது இடம்பெற்றுள்ளது.

பாடசாலையின் அருகில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்த குளவிக்கூடு திடீரென்று கலைக்கப்பட்டதன் காரணமாகவே மாணவர்கள் மீது குளவிக் கொட்டுத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இதன்போது குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 06 பாடசாலை மாணவர்கள் மற்றும் 05 பெற்றோர்கள் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பண்டாரவளை வலயக் கல்விப் பணிமனையின் ஆலோசனைக்கு ஏற்ப மறு அறிவித்தல் வரை பாடசாலை மூடப்பட்டுள்ளது. (ம-7,9)

## ஆசிரிய பயிலுனர்களுக்கு மீண்டும் ஓர் சந்தர்ப்பம்

### கல்வி அமைச்சு

ஆசிரிய நியமனத்திற்காக, தேசிய கல்வியற் கல்லூரிகளில் நடத்தப்பட்ட பரீட்சைகளில் சித்தியடையாத ஆசிரிய பயிலுனர்களுக்கு மீண்டும் அந்த பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

தேசிய கல்வியல் கல்லூரிகளில் பயிற்சியினை நிறைவு செய்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் சித்தியடையாமல் இருப்பதால், அவர்கள் மீண்டும் தோற்றுவதற்கு இன்னும் ஒருவருடம் செல்லும் நிலை இருப்பதாக இன்றைய பாராளுமன்ற அமர்வின் போது தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட உறுப்பினர் வேலுகுமார் சுட்டிக்காட்டினார்.

எனவே அதற்கான ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா? என, அவர் கல்வி அமைச்சரிடம் வினவியுள்ளார் இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தேசிய கல்வியற் கல்லூரியில் 7 ஆயிரத்து 800 பேர் பயிற்சியை நிறைவு செய்து நியமனத்தை எதிர்ப்பார்த்துள்ளதாக குறிப்பிட்டார் அவர்களில் 350 பேர் குறித்த பரீட்சையில் சித்தியடையாதுள்ளனர்.

எனவே, முதல் கட்டமாக 7500 பேருக்கு நியமனத்தை வழங்கியதன் பின்னர், எஞ்சிய 350 பேருக்கும் மீளவும் அந்த பரீட்சைக்கு தோற்றுவதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

அந்த பரீட்சையை காலந்தாழ்த்தாது எதிர்வரும் 3 மாதங்களுக்குள் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார். (ம-7,9)

## குளத்தில் நீராடச்சென்ற பெண் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை எத்தாபெந்திவெவ குளத்திற்கு குளிக்கச் சென்ற பெண்ணொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. இதில் ஆர்.சியந்தா சந்ரகாந்தி (47 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,9)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர் கில்னர் ஒழுங்கை அருள் மிகு மகாமாரி அம்பாள் திருக்கோவிலின் 2023 ஆம் ஆண்டுக்கான அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் ஆனது நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறும் இவ் மஹோற்சவம் தனில் எதிர்வரும் 08.06.2023 வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது. (ம-7,9)

## அமெரிக்க தூதரகம் 29 ஆம் திகதி மூடப்படும்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் அதன் தூதரகப் பிரிவு ஆகியவை எதிர்வரும் 29ஆம் திகதி மூடப்படவுள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இராணுவ உறுப்பினர்களின் நினைவாக தின விடுமுறை காரணமாகவே தூதரகம் அன்றைய தினம் மூடப்படவுள்ளது என தூதரகம் அறிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு-II

17


கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

















### மீன்களை இனங்காணும் உபகரணம்

இது மீன்களை இனங்காணும் உபகரணமாகும். நீரினுள் செல்லக் கூடிய அலைகளைப் பயன்படுத்தி ஒலி அலைகள் கடலினுள் செலுத்தப்படும். மீன்களின் உடலில் பட்டு வரும் ஒலியை அவதானித்து மீன்கள் காணப்படும் இடத்திற்குள்ள தூரம் கணிக்கப்படும்.

### சோனார்கருவி

இதுவும் மீன்கள் உள்ள இடத்தைக் கண்டறியும் கருவி ஆகும். அவ்வாறே இந்த கலனை (படகை) சுற்றியுள்ள வேறு கலன்கள், பொருட்கள் ஆகியவற்றையும் இனங்காண இது உதவும்.








### கப்பல் கண்காணிப்பு அமைப்பு

ஒரு கப்பல் கண்காணிப்பு அமைப்பு (VMS) என்பது ஒரு கணினி அடிப்படையிலான அமைப்பாகும். இது கப்பல்களின் நிலையைத் தானாகக் கண்காணிக்கவும் கரையிலிருந்து பகுப்பாய்வு செய்யவும் அனுமதிக்கிறது. இந்த அமைப்பானது செயற்கைக் கோள் மற்றும் செல்லுலார் அடிப்படையிலான தகவல் தொடர்புகளைப் பயன்படுத்துகிறது.

### கப்பல்களில் உள்ள தகவல் பரிமாற்றி

அலகுகள் கப்பலின் அடையாளம், இருப்பிடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றை உள்ளடக்கிய நிலை அறிக்கைகளை அனுப்புகின்றன. மேலும் அவை இறுதிப் பயனரின் கணினித் திரையில் தோற்றமளிக்கும்.




கடற்றொழில் மற்றும் நீரில் வளங்கள் திணைக்களத்தின் கீழ் நிறுவப்பட்ட VMS (கப்பல் கண்காணிப்பு அமைப்பு) மையம் மூலம் கடலில் படகு (கப்பல்) களின் நிலையத்தை தானாகக் கண்காணித்தல் செய்கின்றது.

### கடற்றொழில் மற்றும் நீரில் வளங்கள் திணைக்களத்தின் நடவடிக்கைகள்

- பலதரப்பட்ட படகுகள் மீது கப்பல் கண்காணிப்பு முறை பிரிவை நிறுவுதல்.
- படகு உரிமையாளர்களுக்காகவும் தட்டுப்பாட்டிற்காகவும் விழிப்புணர்வு பிரகடனங்கள் நடத்துதல்.
- தினசரி 4 மணி நேரத்திற்கு ஒருமுறை மேம்படுத்தப்பட்டு தகவல் புதுப்பிக்கப்படும்.
  - ○VMS சாதனத்தின் குறுக்கீடு குறித்த விபரங்களைப் புகாரளித்தல். இது அமைதியான படகுகள் சம்பந்தமானது
  - ○எல்லை கடந்து வருதல் கவல் அறிக்கை
  - ○துயரத்தில் எச்சரிக்கை சரிபார்ப்பு
- மு.ப.7.00, பி.ப.2.00. மற்றும் பி.ப.10.00.ஆகிய நேரங்களில் பின்வரும் தகவல்கள் சம்பந்தமான அறிக்கை பெறல்.
  - ○ துறைமுகத்திற்குள் வரும் ஒவ்வொரு படகுப் பணயப்பாதை (வ்ரைபடங்கள்) பற்றிய அறிக்கை பெறுதல்
  - ○ 48 கி.மீ. தடுப்பு வலையத்தின் எல்லையைத் தாண்டிய படகு தொடர்பான அறிக்கை
  - ○ எல்லை கடந்து வருதலில் ஈடுபட்ட படகு சம்பந்தமான அறிக்கை பெறுதல்
  - ○ புறப்படும் கப்பல்களின் அறிக்கை பெறல்
  - ○ அதிகாரத்தின் இரண்டு நாட்களுக்குப் பிறகு சக்தி இழந்த அதன் உள் பட்டரியைப் பற்றிய அறிக்கை பெறுதல்
  - ○ உள்பட்டரியின் சக்தி ஏற்ற அறிக்கை
  - ○ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அமைதியான கப்பல்களின் அறிக்கை பெறுதல்

இது போன்ற தகவல்களை கடற்றொழில் மற்றும் நீரில் வளங்கள் திணைக்களம் கப்பல் கண்காணிப்பு அமைப்பு மூலம் பெறுகின்றது.

### அதிக வலு கொண்ட இழுவைக் கருவி

அதிகநிறைகொண்டமீன்பிடிச் சாதனங்கள் மற்றும் மீன் விளைச்சல்களைப் படகில் இழுத்துப் போட இந்த உபகரணம்உதவும். அதாவது வலை அல்லது மற்ற வகை மீன்பிடி உபகரணங்களை படகை நோக்கி நகர்த்த அல்லது தண்ணீருக்குள் விடுவதற்கு இது உதவுகிறது. இலங்கையில் நீரியல் அமுக்கத்தின் மூலம் செயற்படுத்தப்படும் இழு கருவிகள் பயன்படுத்தப்படும்.

மீன்பிடி இழுவை படகுகள் உலகின் மிகவும் ஆபத்தான பணியிடங்களில் ஒன்றாகும். வணிக மீன்பிடித் தொழிலில் வேலை செய்வது மிகவும் ஆபத்தானது. எந்தத் தொழிலிலும் மற்ற வகை வேலைகளை விட விபத்துக்களால் அதிக காயங்கள் மற்றும் இறப்புகள் ஏற்படுகின்றன.

இந்த வகையான வேலை மிகவும் அபாயகரமானதாக இருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. மீன்பிடி இழுவை படகுகளில் உள்ள வின்ச் உபகரணமும் மீனவர்களுக்கு ஆபத்து விளைவிக்கும் காரணங்களில் ஒன்றாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலையை...

கிராம் பால்மாவின் விலை 50 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 1030 ரூபாயாகும்.

அத்துடன், ஒரு கிலோகிராம் உலர்ந்த மிளகாய் விலை 45 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் விலை 1350 ரூபாயாக உள்ளது.

மேலும் சிவப்பு பருப்பு, சோயாமீட், வெங்காயம் மற்றும் வெள்ளைச் சீனி போன்ற பொருட்களின் விலையிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 325 ரூபாயாகவும் சோயாமீட் விலை 660 ரூபாயாகவும் பெரிய வெங்காயத்தின் விலை 129 ரூபாயாகவும், வெள்ளைச் சீனியின் விலை 239 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## தையிட்டியில்...

பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டபோது, போராட்டம் நடத்த நீதிமன்றம் தடைவிதித்ததாக தெரிவித்து பொலிஸார், போராட்டக்காரர்களை கைது செய்ததோடு பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனை பலவந்தமாக தூக்கிச் சென்றனர்.

கைதானவர்கள் சார்பில் 15 சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 9 பேரையும் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது கைதானவர்களை விளக்கமறியலில் வைக்க பொலிஸார் கோரிய போதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணிகள் அதை எதிர்த்தனர்.

நேற்று 2.30 மணிக்கு மீண்டும் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, கைதானவர்களை பிணையில் விடுவித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை தடுக்க முடியாதென்றும் உத்தரவிட்டது. (ம-7,9,33)

## பொதுப் பயன்...

கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்கம் செய்யும் பிரேரணை நேற்று விவாதிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அதன்படி, குறித்த பிரேரணை தொடர்பான விவாதம் இடம்பெற்ற நிலையில், மாலை 5 மணியளவில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவரை அந்தப் பதவியில் இருந்து நீக்குவதற்கான குற்றப்பத்திரிகையை தயார் செய்ததாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஜனவரி 29ஆம் திகதி முதலில் அறிவித்தார்.

அதனை எதிர்கொள்ள மிகவும் ஆவலாக உள்ளதாக ஆணைக்குழு தலைவர் அன்றே தெரிவித்திருந்தார்.

இதேவேளை, கடந்த பெப்ரவரி 16ஆம் திகதி பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவின் கொள்ளுப்பிட்டி அலுவலகத்திற்கு சீல் வைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

மேலும், கடந்த மார்ச் 10ஆம் திகதி, மின் கட்டணத்தை உயர்த்தும் மின்சார சபையின் முடிவை ரத்து செய்யக் கோரி, உயர் நீதிமன்றில் ஜனக ரத்நாயக்க நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இவ்வாறான சிக்கல்கள் எழுந்துள்ள நிலையிலேயே அவரை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## கிளிநொச்சியில்...

என்பவரே உயிரிழந்தவராவார்.

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்த அரச பேருந்துடன், கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே குறித்து விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உயிரிழந்ததுடன், அதில் பயணித்த சிறுவர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-7,9,60,100)

## பெருந்தொற்று...

நேற்று சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது தலைவர் டெட்ரோஸ் அதானம் கேப்ரியேசஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

கோவிட் தொற்றுநோயைவிட அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான தொற்றுநோய் பரவ வாய்ப்பு உள்ளது. அது பரவாமல் தடுப்பதற்கான பேச்சுவார்த்தைக்கு உலக நாடுகள் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

கோவிட் பெருந்தொற்றால் உலகம் முழுவதும் சுமார் 2 கோடி பேர் உயிரிழந்துள்ளதுடன், கோவிட் பெருந்தொற்று இனி உலகிற்கு அச்சுறுத்தலாக இருக்காது என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. எனினும், அந்த பெருந்தொற்று மறைந்துவிடவில்லை. தொலைவில் இருக்கிறது.

புதிய பெருந்தொற்று கோவிட் பெருந்தொற்றைவிட அதிக உடல் பாதிப்புகளையும், உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தும் என்பதால், அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக வேண்டும்.

கோவிட் தொற்று நோய் வந்தபோது அதனை எதிர்கொள்ள உலகம் தயாராக இல்லை. அதன் காரணமாக அது மிகப் பெரிய சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியது. புதிய தொற்று நோயும் வீழ்த்தக் கூடியதாக இருக்காது.

அது நமது கதவைத்தட்டப்போகிறது. நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்யாவிட்டால் அது நடக்கும். இப்போதே நாம் செய்யாவிட்டால், பிறகு எப்போது என்று டெட்ரோஸ் அதானம் கேப்ரியேசஸ் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## தொல்...

யாடல் ஒன்று நேற்றைய தினம் நண்பகல், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு தலைமையகத்தில் இடம்பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கில் தொல்பொருள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்த விவரண அறிக்கை ஒன்றை கடந்த 2023.05.09 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பித்த சிறீதரன் எம்.பி, அவ் அறிக்கையின் பிரதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களின் தூதுவர்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமை அமைப்புகள் என்பவற்றுக்கு தனித்தனியே அனுப்பி வைத்திருந்த நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற அவ் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே, ஆணைக்குழுவின் பிரதானிகளால் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ம-7,9,315)

## ஜூலை முதல்...

டுத்தலங்களுக்கான கட்டணங்கள் 23 சதவீதத்தாலும் உல்லாச விடுதிகளுக்கான மின் கட்டணங்கள் 40 சதவீதத்தாலும் குறைக்கப்படுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7,9)

## ஆசிரியரைத்...

மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாணவனால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஆசிரியர் ஒருவர் மீது பிரச்சினை ஏற்பட்டு குறித்த மாணவனின் தந்தையால் ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9,33)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1579
மிதுனம் 6 3 1 4 1 9

தன நிதானய
திகதி - 2023.05.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1154
L 41 58 76 78

கொவிசெத
திகதி 2023.05.24
சீட்டிழுப்பு இலக்கம் 3366
L 27 52 59 66

மெகா பவர்
திகதி 24/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1472
U 03 09 17 42 46

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.05.24
சீட்டிழுப்பு இலக்கம் 433
விருச்சிகம் 36 39 50 56 விருச்சிகம்

மஹஜன சம்பத
திகதி 2023/05/24
சீட்டிழுப்பு இலக்கம் 5124
U 8 7 1 3 9 1

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2098 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.05.24 தினம் புதன்கிழமை
S 28 38 39 75
ரூ. 4,719,620/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.05.24
வெற்றி வாரம் 4259
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,482,432.60
11 13 50 73 G

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,936,529.60
திகதி 2023-05-24
வெற்றி வாரம் 3810
வர்ணம் பச்சை
05 33 48 58
ரூ. 10,219,820/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 12 08 33 53 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 332,374,989.00
1274
2023.05.24 புதன்கிழமை

ஜயோதா Jayoda
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.05.24
வெற்றி வாரம் 1924
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,247,091.60
16 17 29 44 B

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் 1924
சீட்டிழுப்பு திகதி 2023.05.24
ரூ. 51,475,600/-
02 12 36 44 T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த பண்ணைக்கு ஆண் வேலையாட்கள் தேவை.

- மாடு மேய்க்க தெரிந்திருப்பவராக ஏனைய பண்ணை வேலைகளும் செய்யக்கூடிய தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
- தங்கி நின்று வேலை செய்பவர்கள் மாத்திரம் உள்வாங்கப்படுவர். பண்ணையில் தங்கியிருக்கும் மற்றும் வேலை நேரங்களில் மதுபானம் அருந்தல், புகைத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
- விடுமுறை :- மாதத்தில் மொத்தம் 5 நாட்கள் சம்பளத்துடனான விடுமுறை உண்டு.
- வயது எல்லை :- 25-50 வயது
- தங்குமிட வசதி உண்டு.
- சம்பளம் :- அடிப்படைச் சம்பளம் + விசேட ஒதுக்கீட்டு கொடுப்பனவுகள் + மொத்த EPF& ETF அடங்கலாக சுமார் 53,105/=

(C-6612) தொடர்புகளுக்கு : **076 200 1700**

## கல்யாணமாலை பதவி வெற்றிடம்

**முகாமைத்துவ உதவியாளர்**

**பெண்கள்**

(தமிழ் ரைப்பிங் தெரிந்தவர்கள்)

குறிப்பு : யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்புகளுக்கு:

**076 097 3127**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15709)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

கந்தரோடை ஸ்கந்தவரோதையா கல்லூரியில் இருந்து 50 meter தூரத்தில் சண்டிலிப்பாய் செல்லும் பிரதான வீதியில் 7 பரப்பு பனைமரங்கள் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம். தரகர்கள் தேவையில்லை. (15728)

**076 525 9815**
**077 754 2174**
**077 717 3920**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்

**திரு. ச.சுதர்சன்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் சண்முகராஜா நாகபூஷணியம்மா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

**யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை**

(15730)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6614)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS

**0777-068-777**

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



(15737)

077 544 8503

## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

### கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய சாமான்கள், சில்வர் சாமான்கள் பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், கிளினர், திரவியங்கள், கான்ட்வோஸ், கொம்போட், வாசனை திரவியங்கள், மாபிள் கிளினர், றூம் ஸ்பிறே, தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெயிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், பெர்ஸ் வகைகள், அன்பளிப்பு பொருட்கள் மணிக்கூட்டு வகைகள்

**இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.**

என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (15732)

**சரவணபவன் பான்சி ஹவுஸ்**

**26/1 ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்

**தே.கலைத்தாசன் (குரன்)** **021 315 5900**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இளவாலையில் 40 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- இளவாலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- இளவாலை சந்தியில் இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.

(15732)

**076 333 6079**
**076 733 6093**
**076 911 9371**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

(15732)

**077 638 5683**
**076 755 8606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்பு காணி விற்பனைக்கு**

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(15732)

**076 739 0413**
**076 436 5814**
**077 065 4525**

## மரண அறிவித்தல்

### சண்முகராஜா நாகபூஷணி அம்மா (சந்திரமதி)



சுதுமலை தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா நாகபூஷணி அம்மா (சந்திரமதி) அவர்கள் 24.05.2023 நேற்று புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பவளம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகராஜாவின் அன்பு மனைவியும் சோமசேகரம்(கொழும்பு), அருந்தவநாயகி (பிரேமா - சுதுமலை), சிவகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசலட்சுமி காலஞ்சென்ற பாலச்சந்திரன், செந்திரு (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் மைதிலி (சுதுமலை), சயந்தினி (இத்தாலி), சுதர்சன் (ஆசிரியர் - கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திலகராஜா (சுதுமலை), செந்தில்குமார் (இத்தாலி), தனுசியா (ஆசிரியர்-வட்டு மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிராமி (ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்), சுவேதன் (இத்தாலி), ஆர்த்திகன் (இத்தாலி), தக்ஷாஹரி, அட்சயன், அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை 25.05.2023 இன்று வியாழக்கிழமை 12.30 மணியளவில் அன்னாரின் சுதுமலை இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-6617) *தகவல் : குடும்பத்தினர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.